மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

EP.No. 1/2017 in OS.No.102/2002

2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 07–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தில்லைசேதுபதி (RW1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.07.03.2024

எ.ம.சா.1

குறுக்கு விசாரணை :–

எனது தகப்பனார் பெயர் முத்துகருப்பத்தேவர். முத்துகருப்பத்தேவருக்கு சித்திரைசாமி, துரைசாமி, சந்திரசேகரன், தில்லைசேகரன், ராமமூர்த்தி, தில்லைசேதுபதி, பார்வதி, சரோஜா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். 5ம்எதிர்மனுதாரர் ஜெயந்திமாலா என்பவர் எனது மனைவி. இந்த நிறைவேற்றுதல் மனுவில் தன்னையும் தரப்பினராக சேர்க்கசொல்லி மனுதாக்கல் செய்து, எதிருரை தாக்கல் செய்ததும் எனது மனைவி என்றால் சரிதான். அவர்தான் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். நான் எனது மனைவியுடன் விருதுநகர் மாவட்டம் செவல்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எவ்வளவு காலமாக செவல்பட்டியில் வசித்து வருகிறோம் என்றால் 5 வருடமாக வசித்து வருகிறோம். வாதிகள் நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், எங்கள் சொத்தில் இடம் இருப்பதாக சொல்கிறார்கள். அந்த வழக்கை வாதிகள் எந்த வருடம் தாக்கல் செய்தார்கள் என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நான் மண்டபத்தில் இருந்தேனா என்றால் இல்லை. சென்னையில் வசித்து வந்தேன். எனது தகப்பனார் எனக்கு ஒரு உயில் எழுதிகொடுத்ததாக சொல்லப்படும் உயிலை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். அநத உயிலின் அடிப்படையில் எனது மனைவிக்கு ஒரு இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன். அதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டு ஆவணங்களின் அடிப்படையில்தான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டும் என கூறி எனது மனைவி மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இரண்டு முக்கிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்னவென்றால், அதை பற்றி பின்பு யோசிக்கலாம். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், எங்களுக்கு எதிராக தீர்ப்பாகும் என்பதால் தான் வேண்டுமென்றே தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் தாவா சொத்தை வாதி சத்தியமூர்த்தி எனது தகப்பனாரிடமிருந்துதான் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தை நான் பார்க்கவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் 3 வது பாராவில், அந்த கிரைய பத்திரத்தை பற்றிய விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் எனது தகப்பனார் வாதிக்கு 11.10.2001 ம் தேதியில் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் மண்டபம் மறவர் தெரு, கிழக்கு 1 வது தெருவில் சர்வேஎண்.249 நமக்கு பாத்தியமான கிழமேல் பாதைக்கும் வடக்கு, தங்கள் மனைவி தமிழரசி மற்றும் அவரது சகோதரி ராஜேஸ்வரி ஆகியோரின் தோட்டத்திற்கு தெற்கு, எனது வீட்டிற்கும், நிலத்திற்கும் மேற்கு என சொல்லிதான் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் இந்த நான்குமாலுக்கு உட்பட்ட தென்வடல் அடி 66 ல் கிழமேல் தென்புறம் 4 1/2 அடி, கிழமேல் வடபுறம் 3 அடி அளவுக்கு 248 சதுர அடி என சொல்லிதான் கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த நான்குமாலுக்கு உட்பட்ட சொத்திற்கு தான் வாதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது

தகப்பனார் எனக்கு உயில் எழுதி கொடுத்த தேதி என்னவென்றால் தேதி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் எனது தகப்பனார் எனக்கு எழுதிகொடுத்த உயில் சாசனம் என்றால் சரிதான். அது ம.சா.ஆ.1 ஆகும். அதில் எனக்கு ஏ செட்டியூல் கண்ட சொத்துகள் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு நினைவில்லை. அதில் பக்கம் 4 ல் என் ஆயுளுக்கு பின்னால் என் மகன் தில்லைசேதுபதி அடைந்து கொள்ளவேண்டிய ஏ செட்டியுல் சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 2 வது இலக்கமாக சொல்லப்பட்டுள்ள சர்வேஎண்.249/4 ல் கண்ட சொத்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 வது இலக்கப்படி கிழமேல் அடி 34, தென்வடல் அடி 53 அளவுள்ள 1782 சதுரஅடி அளவுள்ள மனைநிலம், அதில் கட்டப்பட்டுள்ள மட்டப்பா வீடு, மின்னிணைப்பு, கிணறு மற்றும் தென்னை மரம் ஆகியவை அடங்கியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சொத்துதான் உயிலில் 2 வது இலக்கமாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நான்குமாலாக சுப்பையாதேவர் நிலத்திற்கும், எனக்கு பங்கான தென்னம்பிள்ளை தோட்டத்திற்கும் தெற்கே, மேற்படி தென்னம்பிள்ளை தோட்டடத்திறகும் எனக்கு பங்கான தோட்டத்திற்ம் மேற்கே, என் மகள் பார்வதிக்கு நான் கொடுத்த 6 1/2 செண்டு நிலத்திற்கும் வடக்கே, சர்வேஎண்.249/3 அப்பாவுத்தேவர் நிலத்திற்கும் முன்னால் எஸ்.சத்தியமூர்த்திக்கு சர்வேஎண்.249/4 ல் மேல்புறம் 248 சதுர அடி பாதைக்காக கிரையம் கொடுத்திருக்கும் நிலத்திற்கும், கிழமேல் பாதைக்கும், அழகம்மாள் வென்நிலத்திற்கும் கிழக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் 2003 ல் இறந்துவிட்டார். உயில்சாசனம் 17.10.2002 ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உயில்மூலமாக 2003 ஆண்டே எனக்கு சொத்தில் பாத்தியம் வந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்தபின்பு அந்த சொத்திற்கு எனது பெயரில் பட்டா வந்ததா என்றால் நினைவில்லை. இந்த உயில்சாசனத்தின் அடிப்படையில்தான் எனது

மனைவிக்கு இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அது எந்த தேதியில் எழுதிகொடுக்கப்பட்டது என்ற தேதி நினைவில்லை. 2006 ம் வருடம் எழுதிககொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அந்த செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். அநத் ஆவணமானது 04.09.2006 ல் எழுதிகொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது ம.சா.ஆ.2 ஆகும். அநத் ஆவணத்தில் மொத்தம் 3 இலக்க சொத்துக்களை எனது மனைவிக்கு இனாமாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் 1 வது இலக்கமாக சொல்லப்பட்டுள்ளது சொத்துதான் உயில்சாசனத்தில் கண்ட 2 வது இலக்க சொத்து என்றால் சரிதான். எனது மனைவிக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதிகொடுக்கும்போது எனது தகப்பனார் எனக்கு உயில் சாசனத்தின்மூலம் என்ன விபரங்கள் சொல்லி எழுதிககொடுத்தாரோ அதனடிப்படையில்தான் நானும் செட்டில்மெண்ட் எழுதிகொடுக்கவேண்டும் என்றால் சரிதான். ஆனால் அதற்குமாறாக 1 வது இலக்கத்தில் நான்குமால் போன்ற விபரங்களை தவறாக சொல்லி செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளேன் சரியல்ல. எனது தகப்பனார் எழுதிகொடுத்த உயில்சாசனத்தில் அப்பாவுதேவர் நிலத்திற்கும், என்னால் எஸ்.சத்தியமூர்த்திக்கு சர்வேஎண்.249/4 ல் மேற்புறம் 248 சதுரஅடி பாதைக்காக கிரையம் கொடுத்திருக்கும் நிலத்திற்கும்,. கிழமேல் பாதைக்கும், அழகம்மாள் வென்நிலத்திற்கும் கிழக்கு அப்படி சொன்னதற்கு விரோதமாக, எங்களது ம.சா..2 ஆவணத்தில் அப்பாவுத்தேவர் நிலத்திற்கும், நானும என் சகோதரி திருமதி.சரோஜாவும் நடந்து புலங்கி கொள்ளும் கிழமேல் பாதைக்கும் கிழக்கே அப்படியும் நான் எழுதிகொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான்குமால் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நான் சொல்லியிருக்கும் அந்த சொத்துதான் இந்த வழக்கில் கண்ட தாவா சொத்து என்றால் சரியல்ல. அதேபோல் எனது தகப்பனார் எழுதிகொடுத்த உயில்சாசனத்தினப்டி எனது சொத்திற்கு மேற்கே சத்தியமூர்த்தி கிரையம் பெற்ற

சொத்து என்றால் சரிதான். அதேபோல் மொத்த சொல்லும்போது உயில்சாசனத்திற்கு விரோதமாக கிழமேல் அடி வடபக்கம் 73.5 , தென்பக்கம் 81, தென்வடல் அடி கீழ்புறம் 81.5, மேல்பக்கம் 66 அளவுள்ள 5697.5 சதுரஅடி என்று காட்டி இனாம் செட்டில்மெண்ட் ஆவணமான ம.சா.ஆ.2 லும், அதே சொத்து விபரத்தில் மேற்படி சொத்தை மண்டபம் கிராமத்தில் சர்வேஎண்.249/3 ல் உள்ளதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலம் பாரா 2 ல் மேற்படி சொத்தை பொறுத்து சுவாதீனம் பெறுவதற்காக நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்துவிட்டு அதன்பிறகு எனது மனைவிக்கு பாத்தியமான சொத்தில் உள்ள காம்பவுண்ட் சுவரை இடிப்பதற்கு உதவி கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி காம்பவுண்ட் சுவர் எனது மனைவிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் எனது மனைவியால் கட்டப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த வருடம் எனது மனைவி காம்பவுண்ட் சுவர் கட்டினார் என்றால் 2017 ம் ஆண்டு கட்டினார். மேற்படி காம்பவுண்டு சுவர் வரிசையில் எனது மனைவிக்கு பாத்தியமான சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்ட செப்டிக் டேங்க், கழிப்பறை மற்றும் சுமார் 15 அடி நீளமுள்ள காம்பவுண்ட் சுவர் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு 1987 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனக்கு தற்போது வயது என்னவென்றால் 66 வயது என்றால் சரிதான். நான் சொல்வது போல் கழிப்பறையும், காம்பவுண்ட் சுவர், செப்டிக் டேங்கும் 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்றால் 1964 வருடம் கட்டப்பட்டதாக அர்த்தம் என்றால் சரிதான். அப்போது எனக்கு வயது என்ன என்றால் 5, 6 வயது இருக்கும் திருமணம் ஆகவில்லை. அதனால் எனது மனைவியால் மேற்படி கழிப்பறையும், காம்பவுண்ட் சுவர், செப்டிக் டேங்கும் 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்று சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை சுத்தமான கைகளுடன் அனுகாமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார்

முத்துகருப்பத்தேவர் வாதிக்கு 11.10.2001ம் தேதி எழுதிக்கொடுத்தகிரையப் பத்திரத்தில் கண்ட சொத்திற்கு கீழ்புறமாக அவ்வாறு கழிப்பறையோ, செப்டிக்டேங்கோ, காம்பவுண்ட் சுவரோ இருப்பதாக கிரையப் பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த உயில் பத்திரத்திலும் இரண்டாவது இலக்க சொத்தில் அவ்வாறு கழிப்பறையோ, செப்டிக்டேங்கோ, காம்பவுண்ட் சுவரோ இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு விபரங்கள் சொல்லாத நிலையில் 60 ஆண்டுகளுக்கு முன்பாக கழிப்பறையோ, செப்டிக்டேங்கோ, காம்பவுண்ட் சுவரோ இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் பாரா–3ல் சத்தியமூர்த்திக்கு எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் பக்கம்–1ல் 11வது வரியில் சொல்லப்பட்டுள்ள வாசகங்கள் பாதையை பொறுத்துதான் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால், அதில் மேற்கே உள்ள கழிப்பறையோ, செப்டிக்டேங்கோ, காம்பவுண்ட் சுவரோ இருப்பதாகத்தான் ஒப்புக்கொண்டு வாதி கிரையம் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சத்தியமூர்த்தி தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்புரையை படித்து பார்த்துள்ளேன் என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் எனது தகப்பனார் வாதி சத்தியமூர்த்திக்கு என்ன அளவுகள் சொல்லி கிரையம் கொடுத்தாரா அதே அளவுகளைத்தான் சொத்து விபரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அளவுகளைப் பொறுத்துதான் நீதிமன்றமும் தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கியுள்ளது. அந்த தீர்ப்பில் அந்த வழக்கில் கண்ட பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு எதுவும் செய்திருக்கும் பட்சத்தில் அவற்றை 3 மாத காலத்தில் வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் இருந்ததால் அவற்றை அகற்றவும், சுவாதீனம் பெறவும் வாதி நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று அந்த தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்

பிரதிவாதிகள் 4 பேர் பெயரில் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் அதை நீதிமன்றத்தின் மூலமாக வாதி அகற்றிக்கொள்ள நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கலாம் என்றுதான் அதற்கு அர்த்தம் என்றால் சரியல்ல. வாதி மேற்படி வழக்கில் கண்ட தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லிதான் இந்த நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்துள்ளார். நான் சொல்வதுபோல் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. காம்பவுண்ட் சுவர், செப்டிக்டேங்க், கழிப்பறை ஆகியவற்றை நான் கட்டியிருந்தாலும் அது இந்த நிறைவேற்றுதல் மனுவிற்கு கட்டுப்பட்டது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் பாரா–10 ல் மனுதாரர் எனக்கு அனுப்பிய கேவியட்டிற்கு எனது வழக்கறிஞர் மூலம் ஒரு அறிவிப்பு எ.ம.சா.ஆ.6 அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதில் எனது கட்சிக்காரர் வீட்டிற்கு மேற்கே உள்ள பழைய வேலிகளை அகற்றிவிட்டு ஏற்கனவே வடபுறம் இருந்த காம்பவுண்ட் சுவரை அகற்றி புதிததாக காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த சுவர்தான் தாவா சொத்திற்குள் வரக்கூடிய காம்பவுண்ட் சுவர் என்றால் சரியல்ல. நீதிமன்ற அமீனா தாவா சொத்தை ஒப்படைப்பு எடுக்க வரும்போது நான் ஸ்தலத்தில் இல்லை. எனது சொத்தை ஒப்படைப்பு எடுக்க போவதாக என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் வாடகைக்கு இருப்பவர்கள் சொன்னார்கள். எங்களது வீட்டிற்குள் வந்து அளப்பதாக சொன்னார்கள். எனது சொத்தை காம்பவுண்ட்டுக்குள் வந்து அளந்ததால் தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தை அளவீடு செய்யும்போது நாலு பக்கம் உள்ள சொத்தினை அளந்தால் தான் தாவா சொத்தை நிர்ணயம் செய்ய முடியும் என்பதற்காக அளப்பார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்ததை ஆட்சேபிக்கவில்லை. எனது சொத்திற்கு மேற்கே உள்ள தாவா சொத்தை வாதி கிரைய ஆவணத்தில் கண்ட அளவுப்படி

ஒப்படைப்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். ஏற்கனவே ஆணையர் நியமனம் செய்து அளவீடு செய்து தாவா சொத்தை செப்ட்டிக் டேங்க் இருப்பதாக நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையர் மீண்டும் தாவா சொத்தை அளந்து பார்த்தால் எனது சொத்து எது, தாவா சொத்து எது என்று தெரிய வரும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வேண்டுமென்றே எனது தகப்பனார் கொடுத்த உயில் சாசனத்தில் கண்ட சொத்து விபரத்திற்கு மாறாக எனது மனைவிக்கு கூடுதல் அளவு காட்டி தவறான நான்கு மால்கள் சொல்லியும் இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்ததால் தான் மீண்டும் ஆணையர் நியமணம் செய்ய ஆட்சேபிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி பெற்ற தீர்ப்பின் பலனை அவர் அனுபவிக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான காரணங்களை சொல்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அதன்பெயரில் எதிர்வாதம் செய்த வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி பெற்ற தீர்ப்பை செல்லத்தக்கதல்ல என்று சொல்லவோ, மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியாது என்று சொல்லவோ எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றிக்கொள்ள வாதிக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல தாவா சொத்து என்பது எனது சொத்திற்கு மேற்கே உள்ள சொத்து.

ஒம்/-S.இளையராஜா,<br>
மாவட்ட உரிமையியல் மற்றும்<br>
நீதித்துறை நடுவர்,<br>
இராமேஸ்வரம்